1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு வகையான சங்கங்களுக்கு மட்டுமே இந்த விதிவிலக்கு பொருந்தாது. ஒன்று, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கும், இன்னொன்று கூட்டுறவு நூற்பு ஆலைக்கும். மற்ற ஏழு வகையான சங்கங்களுக்கு இந்த விதிவிலக்கு பொருந்தும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தொழிலாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பொறுத்தவரையில் இந்தச்சங்கங்கள் தொடங்கப்பட்ட முதல் மூன்று ஆண்டுகளுக்கு இந்த விலக்கு உண்டு.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1963–64-ம் ஆண்டிலிருந்து கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 1976–77-ல் 11·13 லட்சம் இழப்பு ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் 1963–64-லிருந்து இதுவரை ஆண்டு தோறும் எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: இதற்குத் தனியாகக் கேள்வி போடுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானலில் அமுதம் அங்காடி.

* வினு எண் 156— திரு. கே. பண்ணை சேதுராம்—மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலில் சிவில் சப்ளை கார்ப்பரேசன் மூலம் அமுதம் ஸ்டோர்ஸ் நிறுவக் கோரி மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்: (அ) ஆம்.

(ஆ) கொடைக்கானலில், கூட்டுறவு சிறப்பங்காடிகள், பண்டகசாலைகள் இயங்கி வருவதால், மேலும் ஒரு 'அமுதம்' பண்டகசாலை அவசியம் தானு ? என்பதை நுகர்பொருள் வாணிபக் கழகம் பரிசீலித்து வருகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் தாலூகாவில் மினி சூப்பர் மார்க்கெட் கூட இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இங்கு

[1978 செப்டம்பர் 12

ஒரு மினி சூப்பர் மார்க்கெட்டாவது வேண்டும் என்று மனு கொடுக்கப்பட்டிருந்தது. இதற்குப் பதிலாக அமுதம் ஸ்டோர்ஸ் ஒன்று துவக்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இதல்லாமல் அங்கே ஒரு மினி சூப்பர் மார்க்கெட் ஆரம்பிப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக அமுதம் அங்காடிகள் திறக்கப் படுகின்றன. மினி சூப்பர் மார்க்கெட் கூட்டுறவுத் துறையால் துவக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் முத்துக் குளிப்பு

*வினு எண் 157—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் முத்துக்குளிப்பு கடைசியாக எந்த ஆண்டு நடைபெற்றது ?

(ஆ) அதன் மூலம் அரசுக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு ?

(இ) மீண்டும் சமீபத்தில் முத்துக் குளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : (அ) மீனளத் துறையினுல் தூத்துக்குடியில் முத்துக்குளிப்பு கடைசியாக 1961-ம் ஆண்டு நடத்தப்பட்டது.

(ஆ) இதன் மூலம் அரசுக்குக் கிடைத்த நிகர இலாபம் ரூ. 1,98,100.

(இ) முத்துச் சிப்பிகளைப் பற்றி இதுவரை அறியப்பட்ட வளர்ச்சி விபரங்களிலிருந்து, அண்மைக்காலத்தில் முத்துக்குளிப்பு நடத்துவதற்கான வாய்ப்பில்லை என்று தெரிகிறது.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சற்றேறக் குறைய 16 ஆண்டுகளாகியும் முத்துச் சிப்பிகள் வளர்ச்சி அடையாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? கடந்த ஆட்சி காலத்தில் முறைகேடாக எடுக்கப்பட்டு முத்துச் சிப்பிகள் அகற்றப்பட்டனவா ? அப்படியானுல் எந்த அளவுக்கு நடத்தப் பட்டது ? அப்படிப்பட்ட முறைகேடு இல்லாமல் இப்போது முத்துச் சிப்பிகள் எடுக்க, ஆய்வு நடத்தப்படுமா ? முத்துச் சிப்பிகளை முறையாக எடுக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS